**MCOP NO: 5517/2019** **DATE: 10.07.2025**

ம.சா :1

பெயர் : திரு. தமிழ்செல்வி

க/பெ : திரு. கஜெந்திரன்

வயது : 57

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக கூடுதல் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 9 - ஐ தாக்கல் செய்கிறேன். மசாஆ-9 ஆன ஆவணம் மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மசாஆ 9 ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் எனது மகன் வலைதளத்தின்(internet) மூலமாக எனக்குஎடுத்து கொடுத்தார். மசாஆ 9-ஐ பொறுத்து எனக்கு எந்த விவரமும் தெரியாது. முதல் எதிர்மனுதாரர் வாகனம் இந்த விபத்திலேயே ஈடுபட வில்லை என்றாலும் நானும் முதல் எதிர்மனுதாரரும் கூட்டு சேர்ந்து கொண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக சொல்லி தண்டத்தீர்வை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பொறுத்து நான் எனது மகனிடம் எந்த விவரமும் சொல்லவில்லை. மாசஆ 9-ஆன ஆவணம் சான்றிட்ட நகல் கிடையாது. அதனால் இந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.